# சோனமின்
## லடாக்!

மனீஷ் லக்கானி



கதாவின் 300எம் திங்க்புக்



நான் ஸோனம்.

நான் லடாக்கில் வாழ்கிறேன்.

(ஸோனம் தன்னுடைய நண்பர் மனீஷ் லக்கானி
மற்றும் செல்லநாயுடன்)



நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன்.

என்னுடைய குடும்பத்திற்குச் சொந்தமான
பாஷ்மினா செம்மறியாட்டு மந்தைகளையும்
நான்தான் பார்த்துக்கொள்கிறேன்.



நான் சங்க்பா பழங்குடியினப் பெண்.
நாங்கள் ஆடுகளை மேய்க்கும்
நாடோடியினத்தைச் சேர்ந்தவர்கள்.



குளிர்காலத்தில் லடாக்கில் எல்லாம்
உறைந்துபோய்விடும்.
பெரிய பெரிய அருவிகள் கூட!

ஆனால் கோடைகால மாதங்கள் லடாக்கில்
கதகதப்பாகவும் வண்ணமயமாகவும் இருக்கும்!





இதுதான் லடாக்கில் எனக்கு மிகவும்
பிடித்த ஏரி. ஸோ கர் ஏரி.



எனக்கு விளையாடப் பிடிக்கும்!

என்னுடைய சைக்கிள் தான் என்னுடைய நெருங்கிய தோழி.



ஆனால், என்னுடைய குட்டித்தோழி பெமா,
அவளுடைய செல்ல ஆடு கூட
சேர்ந்து விளையாட மிகவும் விரும்புவாள்.



செம்மறியாடுகள், ஆடுகள், நாய்கள் எல்லாம்
பணப்பெட்டிகளை விட மேலானவை என்று
என்னுடைய பாட்டி எப்போதும் கூறுவார்!



கடமாக்களின் கம்பளிகளால் வேயப்பட்ட
கொட்டகைகளில் நாங்கள் வாழ்கிறோம்.
இதுதான் எங்கள் சமையலறை.



கடமாக்கள் எங்களுடைய நண்பர்கள் உணவு
பயிர்செய்ய அவை எங்களுக்கு உதவுகின்றன!


லடாக்கில் வேறு
விலங்குகளும் உள்ளன.


அரியவகை
யுரேசிய நீர்நாய்கள்.


சாதுவான குதிரைகள்.


மற்றும், சங்க்கு,
இமயமலை ஓநாய்.



லடாக்கில் ஏராளமான மடாலயங்கள் உள்ளன. இது தில்ஸே மடாலயம். இது சிந்து சமவெளியில் இருக்கிறது.



ஆனால் எல்லாவற்றையும் விடச் சிறந்த விஷயம் – லடாக்கில் எங்கள் இரவுகள் நிறைய நிறைய நட்சத்திரங்களோடு அமைதியாக இருக்கின்றன!

# இமயமலையின் இதயம்!




உங்கள் ஊரிலிருந்து
லடாக் செல்லும் வழியைக்
குறித்துக்காட்டுங்கள்.

# சங்க்பாக்கள்:

சங்க்பாக்கள் ஏறக்குறைய நாடோடிகள் என்று சொல்லத்தக்க பழங்குடியின மக்கள். அவர்கள் உலகின் மிகக் குளிரான பாலைவனங்களில் ஒன்றில் வாழ்கிறார்கள். அந்தப் பாலைவனத்தின் பெயர் சங்க்தாங்க். அது இமயமலையிலிருக்கும் மிகப்பெரிய திபெத்தியப் பீடபூமி.
அது லடாக்கிலிருந்து திபெத் வரை விரிந்திருக்கிறது.

சங்க்பாக்கள் இறைச்சி மற்றும்
கம்பளியை விற்றபடி,
ஒரு புல்வெளிப்பிரதேசத்திலிருந்து
இன்னொரு புல்வெளிப் பிரதேசத்திற்குப்
போய்வருபவர்கள்.

சங்க்பாக்கள் பஷ்மினா மற்றும் கடமாக்
கம்பளிகளைக்கொண்டு எத்தனையோ
அற்புதமான வேலைப்பாடுகளைச்
செய்பவர்கள்.



சங்க்பாக்கள் பார்லி,
கோதுமை மற்றும் பட்டாணிகளைப்
பயிரிடுகிறார்கள்.

# லடாக்கில் உள்ள உருகும் பனிப்பாறைகள்

லடாக்கில் ஏராளமான பனிப்பாறைகள் உள்ளன. அவை எங்களுக்கெல்லாம் மிகவும் முக்கியமா னவை. ஆனால், சுற்றுச்சூழல் மாசடைவதாலும், மரங்கள் வெட்டப்படுவதாலும், பூமியின் வெப்பம் தொடர்ச்சியாக அதிகமாவதால் லடாக்கிலுள்ள பனிப்பாறைகள் உருகுகின்றன.

## எண்ணிப்பாருங்கள்:

லடாக்கில் உள்ள பனிப்பாறைகள் உருகுவதைத் தடுக்க நாம் சூழல்மாசை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

## கேளுங்கள்:

நம்முடைய சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் என்ன செய்யவேண்டும்?

## கலந்துரையாடுங்கள்

உங்கள் நண்பர்களோடு கலந்துரையாடி, சூழல் மாசைக் கட்டுப்படுத்த ஆறுமாதகால திட்டம் ஒன்றைத் தீட்டுங்கள்..

## செயல்படுங்கள்:

- என்ன முடியுமோ செய்யுங்கள். ஒரு சிலவற்றை செய்யத் தொடங்குகள்.
- முடிந்தவரை காலாற நடங்கள், அல்லது சைக்கிளில் செல்லுங்கள்.
- குப்பையை மறுசுழற்சி செய்யுங்கள்.
- துணிப்பைகளைப் பயன்படுத்துங்கள். ப்ளாஸ்டிக் வேண்டாம் என்று உறுதியாக இருங்கள்.
- மரங்களை நடுங்கள்
- உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்படும் உணவையே வாங்கிச் சாப்பிடுங்கள்.




லடாக்குக்கு வந்து,
என்னைப் பாருங்கள்!

**மனீஷ் லக்கானி:** புகைப்படக்கலைஞர் மற்றும் வீரசாகசங்களைத் தேடிச்செல்பவர். மனீஷ் லக்கானிக்கு அவருடைய காமராவையும், சைக்கிளையும் மலைகளையும் மிகவும் பிடிக்கும்! மலைகளின் மீது அவருக்கிருக்கும் அளவுகடந்த அன்பினால் அவர் பலமுறை லடாக்குக்குச் சென்றார்.படைப்புகளுக்கு மிகுந்த உத்வேகம் அளிப்பவை. இந்தியாவில்தான் வண்ணத்தைக் கண்டெடுத்ததாகக் கூறுகிறார் கிறிஸ்டோஃபர்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

''இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா''

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 2017, 2021
பிரதியின் காப்புரிமை © மணீஷ் லக்கானி
சித்திரங்களுக்கான காப்புரிமை © மணீஷ் லக்கானி
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.



## இண்டிகோ தொடரில் இடம்பெறும் மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்







































**FOR OUR BOOKS**

www.books.katha.org

கதைகளின் வழியே இந்தியாவின் பல்கலாச்சார அடையாளம்

— The Pioneer

for children

a katha book

ISBN 978-93-88284-81-3

9 789388 284813

www.katha.org

₹ xxx